இன்று காலை சில இடங்களில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்கள் காரணமாக உயிரிழந்தவர்களுக்கும், அவர்களது குடும்பத்தவர்களுக்கும், காயத்திற்குள்ளான அனைவருக்கும் அரசாங்கத்தின் சார்பில் கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நாசகார செயற்பாடுகள் நாட்டையும், நாட்டின் பொருளாதாரத்தையும் குழைக்கும் பாரிய செயற்பாடுகளென நான் கருதுகின்றேன்.

முக்கியமாக மத ஸ்தலங்கள் மற்றும் பிரதான ஹோட்டல்கள் சிலதை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல்களை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். சட்டத்தைப் பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நான் பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலீஸ் மா அதிபர் ஆகியோருக்கு தேவையான பணிப்புரைகளை விடுத்துள்ளேன்.

நானும் ஏனைய அமைச்சர்களும் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாக கௌரவ ஜனாதிபதியவர்களுடன் கலந்துரையாடினோம். இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர், சட்ட மா அதிபர், நிதியமைச்சின் செயலாளர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வுகள் பற்றி தற்போது நடைபெறும் பொலீஸ் விசாரணைகளின் பின்னர் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய நபர்களின் தராதரம் பாராது அவர்களுக்கு எதிராக கடுமையாக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமெனத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இலங்கையர்களான நாம் அனைவரும் நாட்டின் இந்த பிரச்சினைக்குரிய நிலைமையில் பொறுமையாக நடவடிக்கை மேற்கொண்டு சமாதானத்தைப் பாதுகாப்போம்.

நன்றி !